## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 261/2020

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 07 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரூசோ என்கிற கார்த்திக் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : தங்கவேல் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 07–01–2025 | மாவட்டம் | : திருப்பூர் |

### முதல் விசாரணை தொடர்ச்சி:

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

1.கடந்த 09.08.1961ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவு சான்று நகல் வா.சா.ஆ.1.

2.கடந்த 17.02.1988ம் தேதியிட்ட இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2

3. கடந்த 07.09.1988ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.3

4. கடந்த 14.06.1982ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் பதிவு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.4.

5.கடந்த 23.06.1982ம் தேதியிட்ட பாகசாசன பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.5.

6.கடந்த 01.07.2014ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.6.

7.கடந்த 24.08.2016ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் இரத்து பத்திரத்தின் கணினி சான்று நகல் வா.சா.ஆ.7.

8.கடந்த 16.08.2016 தேதியிட்ட பட்டா எண்.3229–ன் நகல் வா.சா.ஆ.8

9.கடந்த 11.08.2016 தேதியிட்ட திருப்பூர் வடக்கு கோட்டாட்சியரின் உத்தரவின் அசல் வா.சா.ஆ.9.

10.கடந்த 20.07.2020 தேதியிட்ட TSLR பதிவேட்டின் கணினி சான்று நகல் வா.சா.ஆ.10.

11.கடந்த 25.10.2016 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் கணினி சான்று நகல் வா.சா.ஆ.11.

12. என்னுடைய வாக்காளர் அட்டையின் உண்மை நகல் வா.சா.ஆ.12

13. என்னுடைய ஆதார் அட்டையின் உண்மை நகல் வா.சா.ஆ.13.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகேளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.07 14:23:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.